بسم الله الرحمن الرحیم　نحمدہ ونصلی علی رسولہ الکریم　وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 10

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்லம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

29 ஜமாதிஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 07 அமான் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி

07 மார்ச் 2019


**அல்லாஹ்வின் கட்டளை**

قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ○

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (இதனை) புறக்கணித்துத் திரும்பி விட்டால், அல்லாஹ் நிராகரிப்பவர்களை ஒருபோதும் நேசிப்பதில்லை (என்பதனை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.) (3:33)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறையச்சமுடைவர்களுக்கு மறுமையின் வாழ்க்கை இங்கேயே காட்டப்படுகிறது. அவர்களுக்கு இவ்வுலகிலேயே இறைவன் காட்சியளிக்கின்றான். மேலும் அவர்களிடம் உரையாடுகின்றான்**

**இறைநேசர் ஒருவரின் கூற்று என்னவென்றால், ஒருவர் தமது வாழ்நாளில் ஒரு உண்மையான கனவை காண்பதற்கான பாக்கியத்தை பெறவில்லை என்றால் அவரது முடிவு அபாயகரமானதாகும்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### இறையச்சமுடைவர்களுக்கு மறுமையின் வாழ்க்கை இங்கேயே காட்டப்படுகிறது

ஆக, இது ஓர் அருட்கொடையாகும். அதாவது இறைநேசர்களுக்கு இறைவனது வானவர்கள் தென்படுகின்றனர். மறுமையின் வாழ்க்கை என்பது வெறும் நம்பிக்கையே ஆகும். ஆனால் இறையச்சமுடைய ஒருவருக்கு மறுமையின் வாழ்க்கை இங்கேயே காட்டப்படுகிறது. அவர்களுக்கு இவ்வுலகிலேயே இறைவன் கிடைத்து விடுகின்றான். அவர்களுக்கு காட்சியளிக்கின்றான். அவர்களிடம் உரையாடுகின்றான். ஆக இத்தகைய நிலை எவருக்கு கிடைக்கவில்லையோ அவர் மரணிப்பதும் மேலும் இங்கிருந்து சென்று விடுவதும் மிகவும் தீயதாகும்.

இறைநேசர் ஒருவரின் கூற்று என்னவென்றால், ஒருவர் தமது வாழ்நாளில் ஒரு உண்மையான கனவை காண்பதற்கான பாக்கியத்தை பெறவில்லை என்றால் அவரது முடிவு அபாயகரமானதாகும். இதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் இறையச்சமுடையவர்களின் அடையாளமாக குறிப்பிட்டுள்ளான்.

கேளுங்கள்! எவரிடத்தில் இந்த அடையாளம் இல்லையோ அவரிடம் இறையச்சம் இல்லை. ஆக இந்த நிபந்தனை நம்மிடத்தில் முழுமையாக வேண்டும் என்பதே நம் அனைவரது துஆவாக இருக்க வேண்டும். அல்லாஹ்விடமிருந்து இல்ஹாம், கனவு, உரையாடுவதற்கான பாக்கியம் கிடைக்க வேண்டும். ஏனென்றால் இது நம்பிக்கையாளரின் சிறப்பம்சமாகும். ஆக இது இருக்க வேண்டும்.

இறையச்சமுடைவர்களுக்கு கிடைக்கின்ற மேலும் பல அருட்கள் இருக்கின்றன. உதாரணமாக, திருக்குர்ஆனின் ஆரம்பத்திலேயே இருக்கின்ற சூரா ஃபாத்திஹாவில்,

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

என்ற துஆவை கேட்க வேண்டும் என்று அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் வழிகாட்டுகின்றான். அதாவது எவர்கள் மீது நீ உனது அருட்கொடையும், அருளும் உள்ளதோ அத்தகைய நேரான வழியை கூறுவாயாக. இந்த துஆ ஏன் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென்றால், மனிதன் முயற்சி செய்தவாறு அவன் படைக்கப்பட்டதன் நோக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும். மேலும் இந்த சமுதாயம் விலங்குகளைப் போன்ற வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடாது. மாறாக, எல்லா விதமான திரைகளும் அகன்று விட வேண்டும் என்பதாகும்.

ஷீயாக்களின் கொள்கை என்னவென்றால், 12 இமாம்களுடன் தலைமைத்தும் முடிந்து விட்டது என்பதாகும். ஆனால் இதற்கு மாற்றமாக இந்த துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இறையச்சயமுடையவர் இறைவனது விருப்பத்திற்கேற்ப இருப்பார் என்றால் அவர் நபிமார்கள் மற்றும் தூயவர்கள் பெற்ற அந்தஸ்தை இவர்களும் பெற வேண்டும் என்று இறைவன் முதலிலேயே எண்ணியிருந்தான் என்பது தெரிய வருகின்றது.

மேலும் மனிதனுக்கு அதிகமான ஆற்றல்கள் கிடைத்துள்ளன. அவன் அதன் மூலம் அதிய முன்னேற்றம் பெற வேண்டும். ஓர் ஆடு அது மனிதனாக இருக்கவில்லை. மேலும் அதனிடம் இருக்கின்ற ஆற்றல்களால் முன்னேற்ற முடியாது. உறுதியான எண்ணம் கொண்ட ஒரு மனிதர் ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்களின் நிலையைக் கேட்கின்றபோது அந்த தூய கூட்டத்திற்கு கிடைத்த அந்த அருட்கள் மீது வெறும் ஈமான் மட்டும் கொள்ளாமல் படிப்படியாக அந்த அருட்களைப் பற்றிய நிச்சய அறிவு அவருக்கு கிடைக்க வேண்டும் என்றும் விரும்புகின்றார்.

### குருடர் யார்?

குருடர் என்பதன் பொருள் என்னவென்றால், அவர் ஆன்மீக ஞானங்கள் மற்றும் ஆன்மீக இன்பத்திலிருந்து காலியாக இருப்பவரே ஆவார். ஒரு நபர் முஸ்லிம் வீட்.டில் பிறக்கிறார் என்பதனால் முஸ்லிம் என்று அழைக்கப்படுகின்றார். இவ்வாறே ஒரு கிறித்தவர் கிறித்தவரின் வீட்டில் பிறந்து கிறித்தவராகி விடுகின்றார். இதன் காரணமாகவே அந்த நபருக்கு இறைவன், நபிமார்கள் மற்றும் திருக்குர்ஆன் மீது எந்த கண்ணியமும் இருப்பதில்லை.

அவர் மார்க்கத்தின் மீதான அன்பு கொள்வது கூட குற்றச்சாட்டிற்கு உரியதாகவே இருக்கிறது. இறைவன் மற்றும் நபிமார்களை இழிவுபடுத்துகின்றவர்களுடன் அவர் வாழ்க்கை கழிக்கின்றார். இதன் காரணம் என்னவென்றால், இத்தகைய

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இவர்கள் தொடர்பாக எது எழுதப்பட்டுள்ளதோ..... உண்மையிலேயே இவர்களின் நற்பண்புகள் இதை விட அதிகமாகும்**

**யமாமா போரில் ஷஹாதத்தின் மகத்துவமிக்க அந்தஸ்தை பெற்ற பத்ர் போர் சஹாபியான ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா பின் உத்பா அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**அஹ்மதிய்யா கிலாஃபத்தோடு அளப்பற்ற அன்பு வெளிப்படுத்திய மற்றும் கட்டுப்படுதலின் தொடர்பை கொண்டிருந்த, இயக்கத்தின் நீண்ட கால தொண்டர், கானாவிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் காலேஜின் முதல் துணை பிரின்ஸிபல் மற்றும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி கற்றுக் கொடுக்கும் பொறுப்பை நிறைவேற்றியவரும், மார்க்க அறிஞருமான கண்ணியத்திற்குரிய பேராசிரியர் சவூத் அஹ்மது கான் சாஹிப் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். ஹுஸூர் அவர்கள் அன்னாரது சிறப்பம்சங்களை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01 பிப்ரவரி 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா பின் உத்பா ஆவார்கள். அன்னாரது சுட்டுப்பெயர் அபூ ஹுஸைஃபா ஆகும். இவர்களது பெயர் ஹுஷைன் அல்லது ஹாஷிம் அல்லது கைஸ் அல்லது ஹிஸ்ல், மிக்ஸம் என்று கூறப்படுகிறது. அன்னாரது தாயாரின் பெயர் உம்மே ஸஃப்வான் ஆகும். அவர்களது பெயர் ஃபாத்திமா பின்த் சுஃப்யான் ஆகும். அன்னார் நீண்ட உயரத்தை உடைய அழகிய தோற்றத்தைக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வருகை தருவதற்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 61,62 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 248 ஹதீஸ் எண் 4993 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அம்தாவுல் அஸ்மா தொகுதி 14 பக்கம் 335 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்.

இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A அவர்கள் எழுதியுள்ளார்கள்:

அபூ ஹுஸைஃபா பின் உத்பா அவர்கள் பனூ உமைய்யாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரது தந்தையின் பெயர் உத்பா பின் ரபீஆ ஆகும். குரைஷிகளின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பொய்யனான முஸைலமாவுடன் நடைபெற்ற யமாமா போரில் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்கள் ஷஹீதானார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 124)

ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்கள் அபீஸீனியாவை நோக்கி செய்யப்பட்ட இரண்டு ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டார்கள். அன்னாரது மனைவி ஸஹலா பின்த் சுலைல் அவர்களும் அன்னாருடன் ஹிஜ்ரத் செய்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 62 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தது தொடர்பாக அது எவ்வாறு நடைபெற்றது? ஏன் நடைபெற்றது என்பது தொடர்பாக இதற்கு முன்னரும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இங்கும் சுருக்கமாக நான் எடுத்துக் கூறுகின்றேன். பல்வேறு வரலாற்று நூல்களிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் ஒன்றுசேர்த்து அன்னார் எடுத்துக் கூறிய கருத்துக்களிருந்து பயன்பெற்றவாறு சில விஷயங்களை நான் எடுத்துக் கூறுவேன்.

அன்னார் எழுதுகின்றார்கள்: முஸ்லீம்கள் மீது இழைக்கப்பட்ட துன்பங்கள் அதன் உச்சத்தை அடைந்து, குரைஷிகள் துன்பம் இழைப்பதில் முன்னேறிக்கொண்டே சென்றிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்லிம்களிடம் அவர்கள் அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்யுமாறு கூறினார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: அபீஸினியாவின் மன்னர் நேர்மை மற்றும் நீதியை விரும்பக்கூடியவர் ஆவார். அவரது ஆட்சியில் எவர் மீதும் அநீதியிழைக்கப்பட மாட்டாது.

அந்த காலத்தில் அபீஸீனியாவில் வலுவான ஒரு கிருஸ்துவ ஆட்சி இருந்தது. அங்குள்ள மன்னர் நஜ்ஜாஸி என்று அழைக்கப்பட்டார். அபீஸீனியாவுடன் அரபு நாடுகளின் வணிகத் தொடர்பு இருந்தது. இவர்கள் ஹிஜ்ரத் செய்து சென்ற அந்த நேரத்தில் அங்கு மன்னராக இருந்தவரின் பெயர் அஸ்அமா ஆகும். அவர் ஒரு நேர்மையான, உறுதி வாய்ந்த மன்னராக திகழ்ந்தார்.

எவ்வாறிருப்பினும் முஸ்லீம்கள் மீது இழைக்கப்பட்ட அநீதி அதன் உச்சத்தை அடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம், ஹிஜ்ரத் செய்வதற்கு ஆற்றல் பெற்றவர்கள் அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதற்கிணங்க, நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு ரஜப் மாதத்தில் 11 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அவர்களில் பிரபல்யமான நபர்களின் பெயர்கள்இதுவாகும்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான், பிறகு அன்னாரது மனைவியும் ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்களின் மகளுமான ருகய்யா, அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், சுபைர் இப்னுல் அவாம், அபூ ஹுஸைஃபா பின் உக்பா, (அவர்களைப் பற்றியே தற்போது எடுத்தக் கூறப்படுகிறது.

முதலாவது ஹிஜ்ரத்தில் இவர்களும் பங்க பெற்றிருந்தார்கள்), உஸ்மான் பின் மழ்வூன், முஸ்அது பின் உமைர், அபூ சலமா பின் அப்துல் அஸது, மேலும் அவர்களது மனைவி உம்மே சலமா ஆவர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இது மிகவும் வியக்கத்தக்க விஷயமாகும். அதாவது ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்த நபர்களில் பெரும்பான்மையினர் குரைஷிகளின் வலிமைவாய்ந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். பலஹீனமான மக்கள் குறைவாகவே தென்படுகின்றனர்.

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிய வருகின்றது. முதலாவதாக, வலிமை வாய்ந்த கோத்திரத்தைச் சார்ந்த குரைஷிகளும் கூட மக்கத்து காஃபிர்களின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. இரண்டாவதாக, பலஹீனமான மக்கள் உதாரணமாக அடிமைகள் அந்த நேரத்தில் எந்த அளவுக்கு ஒன்றுமற்றவர்களாக இருந்தனர் என்றால் அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்வதற்குக் கூட ஆற்றல் இருக்கவில்லை.

இம்மக்கள் தென் பகுதி வழியாக பயணம் செய்து அரபு நாட்டின் துறைமுகமாக அன்றைய காலத்தில் திகழ்ந்த சுஃபா என்ற இடத்தை அடைந்தபோது அல்லாஹ்வின் அருளால் அங்கு அவர்களுக்கு பயணம் செய்வதற்கான ஒரு கப்பல் கிடைத்தது. அந்த கப்பல் அபீஸீனாவிற்கு செல்வதற்கு ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. எனவே அவர்கள் அதில் பயணம் செய்தனர். அபீஸீனியா சென்ற பிறகு முஸ்லிம்களுக்கு மிகவும் பாதுகாப்பான வாழ்க்கை கிடைத்தது. மேலும் அல்லாஹ், அல்லாஹ் என்று கூறியவாறு குரைஷிகளின் அநீதியிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

சில வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர். அதாவது இந்த முஹாஜிரீன்களுக்கு அபீஸீனியா வந்து அதிகமான நாட்கள் கழிந்திருக்கவில்லை. அதற்குள் அனைத்து குரைஷிகளும் முஸ்லிம்களாகி விட்டனர். மக்காவில் அமைதி ஏற்பட்டு விட்டது என்ற ஒரு வதந்தி அவர்களை வந்தடைந்தது. இந்த தவறான செய்தியின் விளைவு என்னவாயிற்று என்றால், பல முஸ்லிம்கள் எதையும் பற்றி சிந்திக்காமல் மக்கா திரும்பி வந்தனர்.

இந்த வதந்தி தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த வதந்தி ஏன் பரவியது? இதற்கான காரணம் என்ன? என்பதைப் பற்றியும் எழுதியுள்ளார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்:

உண்மையில் இந்த வதந்தி முற்றிலும் பொய்யான மற்றும் அடிப்படையற்றதாகும். அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்த முஹாஜிரீன்களை திருப்பிக் கொண்டு வரவும், அவர்களை மீண்டும் துன்பத்திற்குள்ளாக்க வேண்டும் என்பதற்காகவும் குரைஷிகள் இந்த விஷயத்தை பரப்பி இருக்கலாம். இன்னும் சொல்வதென்றால், மேலும் இதனை நன்கு கூர்ந்து கவனித்தால் இந்த வதந்தி மற்றும் முஹாஜிரீன்களை திரும்பி அழைப்பதற்காக கூறப்படுகின்ற கதைகள் அனைத்துமே அடிப்படையற்றதாக தெரிகின்றது.

அன்னார் எழுதியுள்ளார்கள்: இதனை உண்மையாக கருதினால் சில ஹதீஸ்களிலும், புகாரியிலும் கூறப்பட்டுள்ள அந்த சம்பவமாக இது இருக்கலாம். அதாவது ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் கஃபாவின் முற்றத்தில் சூரா நஜமின் வசனங்களை ஓதினார்கள். அப்போது அங்கு குரைஷிகளின் சில தலைவர்களும் இருந்தனர். சில முஸ்லிம்களும் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரா நஜம் ஓதி முடித்த பிறகு சஜ்தா செய்தார்கள். அன்னாருடன் அனைத்து முஸ்லிம்களும் காஃபிர்களும் சஜ்தா செய்தனர்.

நிராகரிப்பவர்கள் ஏன் சஜ்தா செய்தனர் என்பது தொடர்பாக நபிமொழியில் கூறப்படவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் உரத்த குரலில் இந்த வசனங்களை ஓதினார்கள். மேலும் அந்த வசனங்கள் எப்படிப்பட்டதென்றால், அவற்றில் ஓரிறைமை மற்றும் அவனது ஆற்றல் தொடர்பாக மிகவும் அழகிய முறையில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அவனது பேருபகாரம் தொடர்பாக நினைவு கூறப்பட்டுள்ளது.

மேலும் அச்சமூட்டக்கூடிய சொற்களில் குரைஷிகள் தீங்கிழைப்பதிலிருந்து விலகவில்லை என்றால் இதற்கு முன்னுள்ள சமுதாயங்களுக்கு ஏற்பட்ட நிலைமைதான் உங்களுக்கும் ஏற்படும் என்று அந்த வசனம் அச்சமூட்டுகின்றது. அந்த மக்கள் இறைதூதர்களை பொய்ப்படுத்தினர். பிறகு இறுதியில் இந்த வசனங்களில், வாருங்கள்! அல்லாஹ்விற்கு முன்பு சிரம்பணியுங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

பிறகு இந்த வசனங்களை ஓதிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றாக சஜ்தா செய்தார்கள். இந்த வசனங்கள் மற்றும் இந்த காட்சி ஆகியவற்றின் வெளிப்படையான தாக்கம் குரைஷிகள் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டதென்றால் அவர்களும் முஸ்லிம்களுடன் இணைந்து சஜ்தா செய்தனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இது வியப்பிற்குரிய விஷயம் ஒன்றுமல்ல. ஏனென்றால் இத்தகைய சந்தர்ப்பங்களில் அதில் கூறப்படுகின்ற சம்பங்களின் அடிப்படையில் சில நேரங்களில் மனிதனின் உள்ளம் அதன் பக்கம் சாய்ந்து விடுகின்றது. மேலும் அவன் தன்னையும் அறியாமலேயே இத்தகைய செயலை செய்து விடுகின்றான். ஆனால் உண்மையில் அவ்விஷயமானது அவனது கொள்கைக்கும், கோட்பாடுகளுக்கும் முற்றிலும் மாற்றமானதாக இருக்கின்றது.

நாமும் பார்த்துள்ளோம். சில நேரங்களில் சில இக்கட்டான நிலைமைகளில் ஒரு நாத்திகர் கூட அல்லாஹ், அல்லாஹ் என்றோ, ராம், ராம் என்று கூறி விடுகின்றார். ஆனால் குரைஷிகள் நாத்தீகராக இருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், அவர்கள் இறைவனுக்கு இணை வைத்து வந்தனர். அதற்கு பகரமாக சிலைகளை வணங்கி வந்தனர். இருப்பினும் அவர்கள் இறை இருப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இன்றும் நாம் பார்க்கின்றோம். பல நாத்தீகரிடம் பேசுகின்றோம். அவர்களிடம் உங்களுக்கு திடீரென ஏதாவது பிரச்சனை வந்து விட்டால் இறைவனது பெயர் உங்களது சிந்தனையில் தோன்றுகிறதா? அல்லது நாவில் வருகின்றதா? என்று கேட்டால் அவர்கள் ஆம் வருகின்றது என்று ஒப்புக் கொள்கின்றனர்.

எனவே இதுவும் அந்த வசனங்களை ஓதிய விதம் மற்றும் வசனங்களின் சொற்கள், மேலும் முஸ்லிம்களின் செயல்கள் ஆகியவற்றின் தாக்கமே ஆகும். எனவே நிராகரிப்பவர்களின் தலைவர்கள் முஸ்லிம்களுடன் சஜ்தா செய்தனர்.

எவ்வாறிருப்பினும், முஸ்லிம்களின் ஜமாஅத் ஒட்டுமொத்தமாக சஜ்தா செய்ததனால் அதன் எத்தகைய தாக்கம் வெளிப்பட்டது என்றால் அவர்களுடன் சேர்ந்து தன்மையும் அறியாமல் நிராகரிப்பவர்களும் சஜ்தா செய்தனர். ஆனால் இத்தகைய தாக்கங்கள் உண்மையில் தற்காலிகமானதாக இருக்கின்றது. பிறகு மனிதன் மீண்டும் தனது பழைய நிலைக்கே வந்து விடுகின்றான். இவ்வாறு நிராகரிப்பாளர்களும் மீண்டும் அதே நிலைக்கு திரும்பினர். அவர்களது நிலை மீண்டும் பழைய நிலைக்கே சென்றது. எவ்வாறிருப்பினும் இது ஒரு சம்பவமாகும். சஹீஹ் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்கள் திரும்பிச் சென்றனர் என்ற செய்தி உண்மையென்றால் இதிலிருந்து தெரிய வருவது, இந்த சம்பவத்திற்குப் பிறகு குரைஷிகள் அபீஸினியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்களை திரும்பிக் கொண்டு வர துடித்துக் கொண்டிருந்தனர். மேலும் இந்த மக்கள் ஏன் சென்று விட்டனர்? நமது கைகளிலிருந்து விட்டு தப்பி விட்டனர்? என்று ஏங்கியிருந்தவர்கள் மக்கத்து குரைஷிகள் முஸ்லிம்களாகி விட்டனர். மேலும் இப்போது மக்காவில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றது என்று அவர்கள் சுயமே இந்த வதந்தியை பரப்பி இருக்கலாம்.

இந்த செய்தி அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்வதவர்கள் வரை சென்றடைந்தும் அவர்கள் மிகவும் மகிழ்சியடைந்தனர். இந்த செய்தியை கேள்விப்பட்டதுமே அவர்கள் மகிழ்ச்சியில் எதைப் பற்றியும் சிந்திக்காமல் திரும்பி வந்து விட்டனர். ஆனால் அவர்கள் மக்காவிற்கு அருகில் வந்தபோது உண்மை நிலை அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே அவர்களில் சிலர் மறைந்தும், சிலர் வலிமை வாய்ந்த மக்கத்து குரைஷி தலைவர்களின் பாதுகாப்பில் இருந்தவாறு மக்கா வந்து சேர்ந்தனர். மேலும் சிலர் திரும்பிச் சென்றனர்.

ஆக குரைஷிகள் முஸ்லிம்களாகி விட்டனர் என்ற வதந்தியில் ஏதாவது உண்மை இருக்குமென்றால், அது சூரா நஜ்ம் வசனத்தை ஓதியபோது சஜ்தா செய்தவர்களைப் பற்றி எடுத்துக் கூறப்பட்ட அந்த அளவில் மட்டுமே இருக்கும்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான். அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்கள் திரும்பி வந்திருந்தாலும் கூட அவர்களில் பெரும்பான்மையினர் திரும்பிச் சென்று விட்டனர். ஏனென்றால் குரைஷிகள் துன்பங்கள் இழைப்பதில் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே இருந்தனர். மேலும் அவர்களது அநீதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப மற்ற முஸ்லிம்களும் மறைந்து மறைந்து ஹிஜ்ரத் செய்ய ஆயத்தமாயினர்.

மேலும் சந்தந்தர்ப்பத்தை பயன்படுத்தி மெதுவாக அங்கிருந்து வெளியேறினர். பிறகு இந்த ஹிஜ்ரத் செய்பவர்களின் தொடர் ஆரம்பமானது. இறுதியாக அவர்களின் அபீஸீனியா ஹிஜ்ரத் செய்தவர்களின் எண்ணிக்கை 100 ஆனது. அவர்களில் 18 பேர் பெண்களும் இருந்தனர். மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சிலரே எஞ்சியிருந்தனர். இந்த இடம்பெயர்தலை சில வரலாற்றாசிரியர்கள் அபீஸீனியாவிற்கு இரண்டாவது முறையாக செய்யப்பட்ட ஹிஜ்ரத் என்றும் கூறுகின்றனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146–149)

அவ்வாறே பிறகு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்தபோது ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா மற்றும் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான சாலிம் ஆகிய இருவரும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர். முதலில் அபீஸீனியாவிற்கு இவர்கள் ஹிஜ்ரத் செய்தனர். பிறகு இவர்கள் திரும்பி வந்தனர். பிறகு இரண்டாவது ஹிஜ்ரத்தில் மதீனாவிற்கு இவர்கள் இருவரும் ஹிஜ்ரத் செய்தனர். அங்கு இவர்கள் ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் என்பவது வீட்டில் தங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா மற்றும் அப்பாது பின் பிஷர் ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 62 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் ஜஹஷ் படையுடன் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்களும் இருந்தார்கள்.

**(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 286 பாப் சரிய்யா அப்துல்லாஹ் பின் ஜஹஷ் (ரலி) – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)**

இதன் விளக்கம் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் உள்ளது. அதனை நான் குறிப்பிடுகின்றேன்.

மக்கத்து தலைர்களில் ஒருவனான குல்ஸ் பின் ஜாபிர் பின் ஃபஹரி குரைஷிகளின் ஒரு படையுடன் மதீனாவின் நகரத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஒட்டங்களை பராமரிக்கும் இடத்தில் தாக்குதல் தொடுத்தான். முஸ்லிம்களின் ஒட்டகங்களை திருடிச் சென்று விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்ததும் ஸைது பின் ஹாரிஸா அவர்களை தமக்குப் பின்னால் அமீராக நியமித்து முஹாஜிரீன் ஜமாஅத்தை தம்முடன் அழைத்தக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். பத்ர் போர் மைதானத்திற்கு அருகிலுள்ள சஃப்வான் என்ற இடம் வரை அவனை பின்தொடர்ந்தார்கள். ஆனால் அவன் தப்பித்து ஓடி விட்டான். இந்த போரை முதலாவது பத்ர் போர் என்றும் கூறுகின்றனர்.

எழுதப்பட்டுள்ளது: குல்ஸ் பின் ஜாபிரின் இந்த தாக்குதல் தற்செயலாக நடைபெற்ற ஒன்றல்ல. அதாவது ஏதோ ஒரு காட்டரபி வந்து தாக்குதல் தொடுத்து விட்டார். அல்லது அறியாமையில் தாக்குதல் நடத்தப்பட்டு விட்டது. திருட வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்குதல் நடைபெற்றது என்பது கிடையாது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது அவனது குறிப்பான எண்ணமாக இருக்கும். ஆனால் முஸ்லிம்கள் விழிப்படைந்ததைப் பார்த்து அந்த ஒட்டங்களை விட்டு விட்டு அவன் சென்று விட்டான்.

மக்கத்து குரைஷிகள் மதீனாவில் முஸ்லிம்களை தேடித் தேடி அழிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தது இதிலிருந்து தெரிய வருவகிறது. குல்ஸ் பின் ஜாபிரின் தாக்குதலானது முஸ்லிம்களை மிகவும் அச்சத்திற்குள்ளாக்கியது. ஏனென்றால் மதீனா மீது நாங்கள் தாக்குதல் தொடுப்போம். தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களை அழித்து விடுவோம் என்று குரைஷிகளின் தலைவர்கள் ஏற்கனவே மிரட்டல் விடுத்திருந்தனர். இதனால் முஸ்லிம்கள் மிகுந்த கவலைக்கு ஆளாகினர்.

இந்த அபாயகரமான சூழ்நிலையைக்கண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் செயல்பாடுகளை அவர்களுக்கு அருகில் இருந்தவாறு, அவர்களது திட்டம் என்ன? அவர்களது எண்ணம் என்ன? என்பதை அறிய வேண்டும் என்றும் அவர்களைப் பார்ப்பதற்காக எப்படிப்பட்ட திட்டத்தை தீட்ட வேண்டும் என்றால் அவர்களுக்கு அருகிலிருந்து அவர்களைப் பற்றிய செய்தி குறித்த நேரத்தில் கிடைத்துக் கெண்டிருக்க வேண்டும். மேலும் இவ்வாறு மதீனாவின் மீது எல்லா விதமான தாக்குதல் தொடர்பான அபாயகரமான நிலைமையிலிருந்து இதனை பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று எண்ணினார்கள்.

எனவே இதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் எட்டு நபர்களைக் கொண்ட முஹாஜிரீன்களின் ஒரு குழுவை தயார் செய்தார்கள். மேலும் குரைஷிகளின் மறைமுகமான எண்ணங்கள் தொடர்பான செய்தியை பெறுவதற்கு எளிதாக இருக்கும் வகையில் இந்த குழுவில் குரைஷிகளின் பல்வேறு கோத்திரத்தைச் சார்ந்தவர்களை நியமித்தார்கள். இந்த குழுவிற்கு அன்னார் அப்துல்லாஹ் வின் ஜஹஷை அமீராக நியமித்தார்கள். இந்த குழுவில் ஹுஸைஃபா பின் உத்பா அவர்களும் இருந்தார்கள். இந்த

குழுவின் நோக்கத்தைப் பற்றி முஸ்லிம்களுக்கு மறைவாக இருக்க வேண்டும். எவருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக அன்னார் இந்த குழுவை அனுப்பி வைத்தவாறு இந்த குழுவின் தலைவருக்கு கூட நீங்கள் எங்கே செல்ல வேண்டும்? எந்த நோக்கத்திற்காக நீங்கள் அனுப்பப்படுகின்றீர்கள்? என்பதைப் பற்றி கூறாமல் செல்லும்போது அவரது கையில் முத்திரையிடப்பட்ட ஒரு கடிதத்தைக் கொடுத்து, இந்த கடிதத்தில் உங்களுக்கான வழிகாட்டல் இருக்கின்றது. நீங்கள் மதீனாவிலிருந்து இந்த பக்கம் இரண்டு நாட்களுக்கான பயணத்தை முடித்த பிறகு இந்த கடிதத்தை திறந்து இதில் கூறப்பட்ட வழிகாட்டலுக்கேற்ப செயல்பட வேண்டும் என்று கூறினார்கள்.

எனவே அப்துல்லாஹ் மற்றும் அவருடன் இருந்தவர்கள் தமது தலைவரின் கட்டளைக்கேற்ப சென்றனர். இரண்டு நாட்களுக்கான பயணத்தை அவர்கள் மேற்கொண்ட பிறகு அப்துல்லாஹ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது வழிகாட்டலை திறந்து பார்த்தார்கள். அதில் இந்த விஷயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது நீங்கள் மக்கா மற்றும் தாயிஃபிற்கு இடையில் இருக்கின்ற நஹ்லா என்ற பள்ளத்தாக்கிற்கு செல்லுங்கள். அங்கு சென்று குரைஷிகளின் நிலைமைகளை அறிந்து கொண்டு எங்களுக்கு தெரிவியுங்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏனென்றால், மக்காவிலிருந்து இந்த அளவு அருகில் இருந்தவாறு செய்தியைப் பெறுவது என்பது மிகவும் இக்கட்டான பணியாகும். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் கடிதத்திற்கு கீழே இந்த வழிகாட்டளையும் எழுதியிருந்தார்கள். அதாவது உங்களது இலக்கு தொடர்பாக உங்களுக்கு தெரிந்த பிறகு உங்களில் எவருக்காவது இந்த குழுவில் இணைந்திருப்பதில் ஏதும் தடையாக இருக்குமென்றால் அவர் திரும்பி வர விரும்பினால் அவருக்கு திரும்பி வருவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே அப்துல்லாஹ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது வழிகாட்டலை தம்முடன் இருப்பவர்களுக்கு படித்துக்காட்டினார்கள். ஆனால் அனைவரும் ஒருமித்த குரலில் சந்தோஷமாக இந்த தொண்டை செய்தவதற்கு தம்மை அர்ப்பணித்தனர். மேலும் நாங்கள் இருக்கின்றோம் என்று கூறினர்.

இதற்குப் பிறகு இந்த ஜமாஅத் நஹ்லாவை நோக்கி சென்றது. செல்லும் வழியில் சஅது பின் அபீ வகாஸ் மற்றும் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரது ஒட்டகம் தொலைந்து விட்டது. அவர்கள் அதனைத் தேடியவாறு தம்முடன் வந்திருப்பவர்களை விட்டு பிரிந்து விட்டனர். அவர்களை கடுமையாக தேடிய பிறகும் அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை. இப்போது இந்த குழுவில் 6 நபர்களே இருந்தனர். தமது இலக்கை நோக்கி இந்த ஆறு பேறும் செல்ல ஆரம்பித்தனர். முஸ்லிம்களின் இந்த சிறிய ஜமாஅத் நஹ்லாவை சென்றடைந்தது. மேலும் தமது பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

மக்கத்து காஃபிர்களின் எண்ணம் என்னவாக இருக்கிறது? மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க அவர்கள் நினைக்கின்றார்களா? அவர்கள் என்ன திட்டத்தை தீட்டுகின்றனர்? போன்ற விஷயங்களை அவர்கள் சேகரித்தனர். அவர்களில் சிலர் இது மிகவும் இரகசியமான விஷயம் என்பதால் தமது தலை முடியைக் கூட மழித்தார்கள். ஏனென்றால் வழியில் அவர்களைக் கடந்து செல்லக்கூடியகள் இவர்கள் உம்ரா செய்வதற்காக வந்திருக்கின்றனர் என்று கருதி எவ்வித சந்தேகமும் கொள்ளக்கூடாது என்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்தனர்.

ஆனால் இவர்கள் அங்கு சென்று சிறிது நேரம் கூட கழியவில்லை. அதற்குள் தாயிஃபிலிருந்து மக்காவிற்கு செல்கின்ற குரைஷிகளின் ஒரு சிறிய குழு அங்கு வந்தது. இரண்டு கூட்டமும் ஒன்று மற்றொன்றிற்கு நேர் எதிராக வந்து நின்றது. இவர்கள் முஸ்லிம்களாவர் என்பது அவர்களுக்கு தெரிந்து விட்டது. அவர்கள் போர் செய்வதற்காக முஸ்லிம்களுக்கு முன் வந்தனர். அப்போது முஸ்லிம்கள் நாம் தற்போது என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தனர். ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மறைமுகமாகத்தான் செய்தி சேகரித்து வர அனுப்பினார்கள்.

ஆனால் மற்றொரு பக்கம் குரைஷிகளுன் போர் ஆரம்மாயிற்று. ஒருவர் மற்றொருவருக்கு நேர்எதிரில் இருந்தனர். குரைஷிகளின் இந்த குழுவைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களை பார்த்து விட்டனர் என்பதனால் செய்தியை சேகரிக்க வந்த இந்த விஷயமும் நிச்சயமாக மறைமுகமாக இருக்காது என்ற அச்சமும் இருந்தது.

மற்றொரு பக்கம், இது புனிதமான மாதமாகும். புனிதமான மாதத்தின் இறுதி நாட்களாகும். இந்த நாட்களில் அரபிகளின் நடைமுறைக்கேற்ப எவ்வித போர்களும் நடைபெறக்கூடாது என்று முஸ்லிம்கள் கருதினர். மேலும் சிலர் ரஜப் மாதம் கழிந்து விட்டது. ஷஃபான் துவங்கி விட்டது என்றும் கருதினர்.

சில அறிவிப்புகளில் இந்த குழு ஜமாதில் ஆகிரில் அனுப்பப்பட்டது. ஆனால் இந்த நாள் ஜமாதியின் நாளா? அல்லது ரஜப் நாளா? என்ற சந்தேகமே இருந்தது என்று உள்ளது. ஆனால் மற்றொரு பக்கம் நஹ்லா என்ற இந்த பள்ளத்தாக்கும் புனிதத்தன்மை வாய்ந்த அந்த இடத்திலேயே அமைந்திருந்தது. இன்று ஏதாவதொரு முடிவு எடுக்கப்படவில்லை என்றால் நிச்சயமாக இந்த குழு நாளை புனித இடத்திற்குள் நுழைந்து விடும். எனவே இந்த எல்லா விஷயங்களையும் சிந்தித்து ஆறு முஸ்லிம்களும் எடுத்த முடிவு என்னவென்றால், இந்த குழுவைத் தாக்கி அவர்களை கைது செய்ய வேண்டும் அல்லது கொலை செய்து விட வேண்டும் என்பதாகும்.

எனவே அவர்கள் அல்லாஹ்வின் பெயரால் தாக்குதல் தொடுத்தனர். இதன் விளைவாக நிராகரிப்பாளரில் ஒருவரான அம்ர் பின் ஹஸ்ரமி கொல்லப்பட்டான். இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் நான்காவது நபர் ஒடி விட்டான். முஸ்லிம்களால் அவனை பிடிக்க முடியவில்லை. இவ்வாறு அவர்களைக் கைது செய்ய வேண்டும் அல்லது கொலை செய்ய வேண்டும் என்ற இவர்களது முடிவு வெற்றி பெற்றவாறே இருந்து விட்டது.

பிறகு முஸ்லிம்கள் அந்த குழுவினரின் பொருட்களை கைப்பற்றினர். குரைஷிகளில் ஒருவர் தப்பித்ததால் இந்த போர் பற்றிய செய்தி மக்காவிற்கு தெரிந்து விடும் என்று கருதி அப்துல்லாஹ் பின் ஜஹஷ் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் கிடைத்த செல்வங்களை எடுத்துக் கொண்டு விரைவாக மதீனாவிற்கு திரும்பினர்.

குழுவினரின் மீது தாக்குதல் தொடுக்கவே இவர்கள் அனுப்பப்பட்டனர் என்று விரிவுரையாளர்கள் இதனையும் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறாகும்.

எவ்வாறிருப்பினும், உண்மை என்னவென்றால், சஹாபாக்கள் குழுவினர் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர் என்ற செய்தி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும் அன்னார் கடுமையாக கோபமுற்றார்கள்.

அறிவிப்பில் வருகின்றது. இந்த ஜமாஅத் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து நடந்த அனைத்து சம்பவங்களையும் பற்றி கூறியதும் அன்னார் கடுமையாக கோபமுற்றார்கள். மேலும் கூறினார்கள்: நான் உங்களுக்கு புனிதமான இடத்தில் சண்டையிடுவதற்கு அனுமதி தரவில்லை. இவ்வாறு அன்னார் போர் செல்வங்களிலிருந்து நான் இதில் எதையும் பெற மாட்டேன் என்று

மறுத்து விட்டார்கள். எனவே அப்துல்லாஹ் மற்றும் அவருடன் இருந்தவர்கள் மிகுந்த கவலைக்கு உள்ளானார்கள். மேலும் அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கோபத்தினால் அழிந்து விட்டோம் என்று கருதினர். மிகுந்த அச்சம் அவர்களிடம் ஏற்பட்டது. மதீனாவிலிருந்த சஹாபாக்களும் அவர்களைக் கடிந்தனர். உங்களுக்கு கட்டளையிடப்படாத பணியை நீங்கள் செய்துள்ளீர்கள். நீங்கள் புனிதமான மாதத்தில், புனிதமான நகரத்தில் சண்டையிட்டுள்ளீர்கள். ஆனால் இந்த திட்டத்தில் உங்களுக்கு போர் செய்வதற்கான எந்த கட்டளையும் கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

மறுபக்கம், முஸ்லிம்கள் புனித நகரத்தின் கண்ணியத்தை குலைத்து விட்டார்கள் என்று குரைஷிகள் கூச்சலிட்டனர். கொல்லப்பட்ட அம்ர் பின் ஹஸ்ரமி என்ற அந்த நபர் ஒரு தலைவர் ஆவார். மேலும் மக்கத்து தலைவரான உத்பா பின் ரபீஆவின் நண்பரும் ஆவார். எனவே அப்போது இந்த சம்பவம் குரைஷிகளின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. எனவே அவர்கள் மிகவும் எழுச்சியுடன் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தங்களை செய்தனர். எவ்வாறிருப்பினும் இந்த சம்பவத்தினால் முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பவர்கள் இருவரிடத்திலும் புனிதமான மாதத்தில் இவர்கள் என்ன செய்துள்ளனர் என்று பாருங்கள் என்ற ஒரு சர்ச்சை ஏற்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற தமது நூலில் எழுதுகின்றார்கள்:

இறுதியாக கீழ்க்கண்ட திருக்குர்ஆன் வஹி அருளப்பட்டு முஸ்லிம்களின் மன அமைதிக்கு காரணமானது.

يَسْئَلُوْنَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيْهِ ؕ قُلْ قِتَالٌ فِيْهِ كَبِيْرٌ ؕ وَصَدٌّ عَنْ سَبِيْلِ اللّٰهِ وَكُفْرٌۢ
بِهٖ وَالْمَسْجِدِ الْحَرَامِ ۗ وَاِخْرَاجُ اَهْلِهٖ مِنْهُ اَكْبَرُ عِنْدَ اللّٰهِ ۚ
وَالْفِتْنَةُ اَكْبَرُ مِنَ الْقَتْلِ ؕ وَلَا يَزَالُوْنَ
يُقَاتِلُوْنَكُمْ حَتّٰى يَرُدُّوْكُمْ عَنْ دِيْنِكُمْ اِنِ اسْتَطَاعُوْا

அதாவது அவர்கள் புனித மாதத்தில் போர் செய்வது குறித்து உம்மிடம் வினவுகின்றனர். அதில் போர் செய்தல் (வரம்பு மீறும்) பெரும் செயலாகும். அல்லாஹ்வின் வழியிலிருந்து (மனிதர்களைத்) தடுப்பதும், அவனை நிராகரிப்பதும், புனிதப் பள்ளியை நிராகரிப்பதும் அதிலிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் மாபெரும் (பாவச்) செயலாகும். குழப்பம் கொலையை விடக் கொடியது என்று நீர் கூறுவீராக. அவர்களால் முடியுமாயின் அவர்கள் உங்களை உங்களுடைய மார்க்கத்திலிருந்து திரும்பும்வரை உங்களுடன் போர் செய்து கொண்டேயிருப்பர். **(2:218)**

வரலாற்றிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், முஸ்லிம்களுக்கு எதிராக குரைஷிகளின் தலைவர்கள் புனித மாதத்தில் கூட அவர்களின் பிரச்சாரத்தை தொடர்ந்து செய்து வந்துள்ளனர். புனிதமான அனைத்து மாதங்களில் அவர்கள் இவ்வாறு செய்து வந்தனர். மாறாக இந்த மாதங்களில் புனித மாதங்களின் கூட்டங்கள் மற்றும் பயணத்திலிருந்து பயனடைந்தவாறு இந்த மாதங்களில் தமது தீய நடவடிக்கையில் மேலும் அதிமாக முன்னேறினர்.

மேலும் வெட்கமில்லாமல் தமது உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பதற்காக இந்த புனிதமான மாதத்தை அதன் இடத்திலிருந்து இங்கும் அங்கும் மாற்றி விடுவர். இதனை அவர்கள் நஸீ என்று அழைத்து வந்தனர். மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாள் வரை இவர்கள் முஸ்லிம்களுடன் இவ்வாறே நடந்து கொண்டனர். மாறாக, உச்சத்தை எட்டினர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த சொற்களை பயன்படுத்தியுள்ளார்கள். அதாவது அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் காலகட்டத்திலும் கூட அவர்கள் புனித இடத்தில் முஸ்லிம்களின் நட்புக் கோத்திரத்தின் மீது வாளால் தாக்குதல் தொடுத்தனர். பிறகு முஸ்லிம்கள் அவர்களுக்கு உதவி செய்வதற்காக சென்றபோது அவர்களுக்கு எதிராகவும் புனிதமான மாதத்தில் வாளைப் பயன்படுத்தினர்.

ஆக, அல்லாஹ் திருக்குர்ஆனில் அருளிய இந்த பதில் நிச்சயமாக முஸ்லிம்களுக்கு ஆறுதல் தரக்கூடியதாகவே இருந்தது. பிறகு குரைஷிகளும் எதிர்ப்பில் கடுமை காட்டவில்லை. இதற்கிடையில் அவர்களைச் சார்ந்தவர்கள் தமது இரு கைதிகளை விடுவிப்பதற்காக மதீனா வந்தடைந்தனர். ஆனால் சஅது பின் அபீ வகாஸ் மற்றும் உத்பா தற்போது வரை திரும்பி வரவில்லை. அவர்களது ஒட்டகம் காணாமல் போய்விட்டிருந்தது.

எனவே பெருமனார் (ஸல்) அவர்களுக்கு மிகுந்த அச்சம் இருந்தது. அதாவது குரைஷிகளிடம் மாட்டிக் கொண்டால் நிச்சயமாக அவர்கள் உயிரோடு இவர்களை விட மாட்டார்கள் என்று கருதியவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்விருவரும் திரும்பி வரும் வரை இந்த கைதிகளை விடுவிக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள்.

மேலும் எங்களுடைய இரு நபர்கள் நல்லபடியாக திரும்பி மதீனா வந்தடைந்ததும் உங்களது நபர்களை விட்டு விடுவோம் என்று கூறினார்கள். எனவே அந்த இருவரும் வந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு இந்த கைதிகளை விடுவித்தார்கள். ஆனால் இந்த இருவரில் ஒரு நபருக்கு மதீனாவில் தாம் தங்கியிருந்த போது பெருமானார் (ஸல்) அவர்களது சிறந்த நல்லொழுக்கம் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் உண்மைத்துவத்தின் மீது எத்தகைய தாக்கம் ஏற்பட்டது என்றால் அவர் விடுதலை செய்யப்பட்ட பிறகும் கூட திரும்பிச் செல்ல மறுத்து விட்டார்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது கையில் ஒன்றிணைந்தவாறு முஸ்லிமாகி அன்னாருடன் இணைந்து விட்டார். இறுதியாக அவர் பேரே மஊனாவில் ஷஹீதானார். அவரது பெயர் ஹகம் பின் கைஸான் ஆகும். அநீதி மற்றும் பலவந்தப்படுத்தப்பட்டு முஸ்லிமாக்கப்பட்டார்கள் என்றால் இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்க முடியாது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **330–334**)

அபூ ஹுஸைஃபாவைப் பற்றி இதுவும் வருகின்றது. அதாவது பத்ர் போர் நாளில் அன்னார் தனது தந்தையிடம் சண்டையிடுவதற்காக முன்னேறினார். ஏனென்றால் அவரது தந்தை முஸ்லிமல்ல. அவர் நிராகரிப்பவர்களோடு வந்திருந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை தடுத்து விட்டார்கள். மேலும் கூறினார்கள்: அவரை விட்டு விடுங்கள். வேறு எவராவது அவரைக் கொன்று விடுவார். வேறு யாராவது சண்டையிடட்டும் என்று கூறினார்கள்.

எனவே இந்த பத்ர் போரில் அன்னாரது தந்தை, சிறிய தந்தை, மருமகன் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்கள் மிகுந்த பொறுமையை வெளிப்படுத்திக் காட்டினார்கள். அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொண்டவாறு அல்லாஹ்வின் இந்த உதவியினால் அவன் தனது தூதரின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டியதற்காக அவனுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

(அப்துல் ஜப்பார் அவர்கள் எழுதிய தப்ஸீத் தலாயில் அந்நுபுவ்வத்தி என்ற நூல், தொகுதி **2** பக்கம் **585**)

இந்த சம்பவம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இதுவும் கிடைக்கின்றது. இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் நாளில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களில் யாராவது அப்பாஸுடன் போர் செய்தால் அவரைக் கொல்ல வேண்டாம். ஏனென்றால் அவர் நிர்பந்திற்கு உள்ளானதன் காரணமாக வெளியேறியுள்ளார். அவரை கைதியாக ஆக்கிக் கொள்ளுங்கள். கொலை செய்ய வேண்டாம். அதற்கு அபூ ஹுஸைஃபா அவர்களிடத்தில் இதைப்பற்றி ஒருவர் கூறியபோது அவர், நாம் நமது தந்தை, சகோதரர் மற்றும் உறவினர்களைக் கொன்று விட்டு அப்பாஸை விட்டு விடவா? இறைவன் மீது ஆணையாக! அவர் என் முன்னால் வந்தால் நான் நிச்சயமாக அவரை வாளால் தாக்குவேன் என்று கூறினார்கள்.

இவ்விஷயத்தை அவர் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கூறவில்லை. மாறாக, அவர்களிடம் அப்பாஸை கொலை செய்ய வேண்டாம் என்று அன்னார் கூறியஇந்த செய்தியை கூறியவரிடம் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் வரை இந்த விஷயம் வந்ததும் அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், அபூ ஹஃப்ஸே! இறைவனது தூதரின் சிறிய தந்தையின் மீது வாளினால் தாக்குதல் தொடுக்கப்படுமோ என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர்அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் என்னை முதல் முதலாக சுட்டுப் பெயரால் அழைத்தது இப்போதுதான். ஹஸ்ரத் உமர் அவர்கள், நபிகள் நாயகமே! எனக்கு தாங்கள்அனுமதி தாருங்கள். நான் அவரது கழுத்தை வெட்டி விடுகின்றேன். இறைவன் மீது ஆணையாக! எவர் இவ்விஷயத்தை கூறினாரோ அவரிடம் நயவஞ்சகம் காணப்படுகிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்கள் கூறினார்கள்: நான் எத்தகைய கூற்றை கூறியுள்ளேன் என்றால் அதன் காரணமாக நான் பாதுகாப்பாக இருக்க முடியாது. நான் எப்போதும் அவருக்கு அஞ்சியவாறே இருப்பேன். அதற்கு முன்பாக இஸ்லாத்திற்காக ஷஹீதாக வேண்டும். அப்போதுதான் நான் இந்த தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றேன் என்று நான் எண்ணுவேன். அபூ ஹுஸைஃபா அவர்கள் தான் பெரிய தவறை செய்துள்ளோம் என்று உணர்ந்தார்கள். அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அன்னாருக்கு யமாமா போரில் ஷஹாதத் அந்தஸ்து கிடைத்தது.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 247–248 ஹதீஸ் எண் 4988 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு விஷயம் மன எழுச்சியின் காரணமாக அவரது நாவிலிருந்து வெளிவந்து விட்டது. பிறகு அச்சமும் ஏற்பட்டது. மேலும் அவருக்கு ஷஹாதத் கிடைக்கும் வரை முழு வாழ்நாளும் இந்த அச்சம் அவரிடம் இருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இணைவைப்பவர்களில் கொல்லப்பட்டவர்களை ஒரு குழியில் கிணற்றில் எறிய கட்டளையிட்டார்கள். எனவே அவர்கள் அதில் எறியப்பட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அருகில் நின்றவாறு, கிணறே! உங்கள் இறைவன் உங்களிடம் செய்த வாக்குறுதியை நீங்கள் உண்மை என்று கண்டு விட்டீர்களா? அன்னார் கூறினார்கள்: என்னுடைய இறைவன் என்னிடம் செய்த இந்த வாக்குறுதியை நான் நிச்சயமாக உண்மையானதாக கண்டேன் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் என்னிடம் அவர்களுக்கு தண்டனை வழங்குவேன். உமக்கு எதிரில் அவர்களுக்கு வெற்றியை வழங்க மாட்டேன் என்று அவன் செய்த வாக்குறுதியை நான் உண்மையானதாக கண்டேன். அப்போது சஹாபாக்கள், பெருமானார் (ஸல்) அவர்களே! நீங்கள் மரணித்துப் போனவர்களைப் பார்த்தா கூறுகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது இறைவன் உங்களிடம் அளித்த வாக்குறுதியை இவர்கள் நிச்சயமாக அறிந்து கொண்டார்கள் என்று கூறினார்கள்.

அன்னாரது கூற்றிற்கிணங்க அவர்களை கிணற்றில் போடப்பட்டபோது ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்களின் முகத்தில் விருப்பமில்லாதது போன்ற சில அறிகுறிகள் தென்பட்டன. ஏனென்றால் அவர்களது தந்தையும் அந்த கிணற்றில் எறியப்பட்டிருந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள், அபூ ஹுஸைஃபாவே! இறைவன் மீது ஆணையாக! உங்கள் தந்தையுடன் நடந்து கொண்ட முறை உமக்கு விருப்பமில்லாதது போன்று தெரிகின்றது என்று கூறினார்கள். அதற்கு அபூ ஹுஸைஃபா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு அல்லாஹ் மற்றும் ரஸூல் தொடர்பாக எந்த சந்தேகமும் இல்லை.

ஆனால் எனது தந்தை வீரமிக்கவர், உண்மையாளர் மற்றும் சிறந்த வழிகாட்டி ஆவார். அவர் தனது எண்ணத்தில் எதை புரிகின்றாரோ அதை சரி என்று கருதி வந்தார். ஆனால் அவரிடம் தீய எண்ணம் எதுவும் இருக்கவில்லை. மேலும் அவரது மரணத்திற்கு முன்பாக அவருக்கு இஸ்லாத்தின் பக்கம் அல்லாஹ் அவருக்கு வழிகாட்ட வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால் அவ்வாறு நடப்பது இப்போது சாத்தியமற்றது என்பதை நான் பார்க்கின்றேன். அவருக்கு ஏற்பட்ட முடிவானது என்னை துக்கத்தில் ஆழ்த்தி விட்டது என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அபூ ஹுஸைஃபாவின் பங்கில் அவருக்கு நன்மையை வேண்டி துஆ செய்தார்கள்.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 249 ஹதீஸ் எண் 4995 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்கள் அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரில் தமது 53 அல்லது 54 வயது வயதில் ஷஹீதானார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 62 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்போது நான் கடந்த நாட்களில் வஃபாத்தான ஜமாஅத்தின் நீண்ட காலத் தொண்டர் தில்லியைச் சார்ந்த பேராசிரியர் சவூது அஹ்மது கான் சாஹிப் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். 21 ஜனவரி அன்று அன்னார் இறைவனடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னாரது தந்தை தில்லியைச் சார்ந்த ஹஸ்ரத் முஹம்மது ஹஸன் இஹ்ஸான் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அதே போன்று அன்னாரது பாட்டனார் பட்யாலாவின் ஆசிரியரான ஹஸ்ரத் மஹ்மூது ஹஸன் கான் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 313 சஹாபாக்களின் அட்டவணையில் எண் 301 ல் அன்னாரது பெயரை 'மவ்லவி மஹ்மூது அஹ்மது கான் சாஹிப் முதர்ரிஸ் முலாஸிம் பட்யாலா' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஸமீமா அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 328)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிராஜே முனீர் என்ற தமது புத்தகத்தில் விருந்தினர் இல்லம் மற்றும் தேனீர் போன்றவை ஆயத்தம் செய்வதற்கான சந்தாவின் வருகை என்ற அட்டவணையின் தலைப்பில் அன்னாரது பெயரை 'மவ்லவி மஹ்மூது ஹஸன் கான் சாஹிப் பட்யாலா' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(சிராஜே முனீர், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 85–86)

பேராசிரியர் சவூது கான் சாஹிபின் தந்தை மதிப்பிற்குரிய தில்லியைச் சார்ந்த ஹஸ்ரத் முஹம்மது ஹஸன் சாஹிப் இஹ்ஸான் அவர்களின் வயது 10,12 ஆக இருந்தபோது அவர்களுக்கு குத்பா இல்ஹாமிய்யா சந்தர்ப்பத்தில் காதியான் சென்று இந்த வியக்கத்தக்க அடையாளத்தை தமது கண்களால் சுயமே பார்ப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

(தில்லியைச் சார்ந்த மஸ்வூது ஹஸன் கான் அவர்கள் எழுதிய நயீ ஸிந்தகி என்ற நூல், பக்கம் 107 – 2007 ஆம் ஆண்டு லஜ்னா இமாயில்லாஹ் லாஹூர் சார்பாக அச்சிடப்பட்டது)

பேராசிரியர் சவூது கான் சாஹிப் அவர்கள் ஏப்ரல் 1945 ஆம் ஆண்டு வக்ஃப் செய்தார்கள். அலிகடில் ஃபார்ஸி மொழியில் B.A ஆர்னர்ஸ் முடித்தவர். அன்னார் மற்றும் அவர்களது சகோதரர்களின் வக்ஃப் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1955 ஆம் ஆண்டு ஒரு குத்பாவில் கூறினார்கள்:

மாஸ்டர் முஹம்மது ஹஸன் அஹ்ஸன் சாஹிப் எத்தகைய முன்மாதிரியை காட்டியுள்ளார் என்றால் அது போற்றத்தக்கதாகும் என்று நான் கருதுகின்றேன். அவர் ஒரு சாதாரண ஆசிரியர் ஆவார். மேலும் ஒரு ஏழை மனிதர் ஆவார். அவர் பட்டினியாக இருந்து கொண்டு தமது குழந்தைகளுக்கு கல்வியை வழங்கினார். அவர்களை Graduate செய்ய வைத்தார். மேலும் 7 குழந்தைகளில் 4 பேரை இந்த இயக்கத்திடம் ஒப்படைத்தார். தற்போது அந்த நான்கு நபர்களும் மார்க்கத்திற்காக தொண்டாற்றுகின்றனர். ஏறக்குறைய அனைவருமே வக்ஃபின் உரிமையை செலுத்துகின்ற வகையில் கலப்பற்ற முறையில் தொண்டாற்றுகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த குழந்தைகள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களாக இல்லாமல் இருந்திருந்தால் இந்த ஏழு பேரும் ஒன்று சேர்ந்து 10,20 வருடங்கள் வரை தனது தந்தையின் பெயரை மேலோங்கச் செய்தவாறு எங்களது தந்தை நல்ல மனிதர் என்று கூறினாலும் எனது இந்த குத்பா அச்சிடப்படும்போது லட்சக்கணக்கான அஹ்மதிகள் முஹம்மது ஹஸன் இஹ்ஸான் என்ற பெயரை கூறி அவரைப் புகழ்வார்கள்.

மேலும், அவர் எத்தகைய வீரமிக்க அஹ்மதியாக இருந்தார். அவர் ஏழையாக இருந்து கொண்டு தனது ஏழு குழந்தைகளுக்கும் உயர் கல்வியை வழங்கியுள்ளார். மேலும் அவர்களில் நான்கு பேரை இயக்கத்திடம் கொடுத்து விட்டார். அதாவது வக்ஃப் செய்து விட்டார். பிறகு அந்த குழந்தைகளும் எத்தகைய நல்லவர்களாக திகழ்ந்தனர் என்றால் அவர்கள் மன மகிழ்ச்சியுடன் தனது தந்தையின் தியாகத்தை ஏற்றுக் கொண்டனர். மேலும் தன் தரப்பிலிருந்தும் அவரது முடிவிற்கு உடன்பட்டனர் என்று கூறுவர்.

(தில்லியைச் சார்ந்த மஸ்வூது ஹஸன் கான் அவர்கள் எழுதிய நயீ ஸிந்தகி என்ற நூல், பக்கம் 208 – 2007 ஆம் ஆண்டு லஜ்னா இமாயில்லாஹ் லாஹூர் சார்பாக அச்சிடப்பட்டது)

சவூது கான் சாஹிப் அவர்கள் ஜூன் 1946 முதல் அக்டோபர் 1949 வரை தஃலீமுல் இஸ்லாம் High School காதியானில் படித்துக் கொடுத்தார்கள். அக்டோபர் 1949 ஆம் ஆண்டு சில மாதங்களுக்காக ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பேராசிரியர் என்ற முறையில் ஆங்கில பாடத்தை எடுத்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், 1950 ஆம் ஆண்டு ஆப்ரிக்காவின் கானாவிற்கு மார்க்கத் தொண்டாற்றுவதற்காக அனுப்பினார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 14 பக்கம் 286)

அன்னார் அஹ்மதிய்யா செகன்டரி ஸ்கூலின் முதல் Vice Prinicipal ஆவார்கள். இதற்காக 30 ஏப்ரல் 1950 ல் கராச்சியிலிருந்து சென்றார்கள். 30 ஜூன் அன்று கமாஸி சென்றடைந்தார்கள். அதாவது மே மற்றும் ஜூன் ஆகிய இரண்டு மாதங்கள் பயணம் செய்து கானா சென்று சேர்ந்தார்கள். (இன்று நாமோ ஐந்து, ஆறு மணி நேரங்களில் சென்று விடுகின்றோம்.) ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து கமாஸியிலுள்ள அஹ்மதிய்யா Secondary School ல் படித்துக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

(தில்லியைச் சார்ந்த மஸ்வூது ஹஸன் கான் அவர்கள் எழுதிய நயீ ஸிந்தகி என்ற நூல், பக்கம் 276,277 – 2007 ஆம் ஆண்டு லஜ்னா இமாயில்லாஹ் லாஹூர் சார்பாக அச்சிடப்பட்டது)

அவர்களது பயணம் ஏன் இவ்வளவு நீண்டதாக இருந்தது என்பது தொடர்பாக அன்னாரது மருமகன் இர்ஃபான் கான் அவர்கள் எழுதுகின்றார்கள்: முதலில் அன்னார் ரப்வாவிலிருந்து கானா சென்றார்கள். இரண்டு மாதம் கடுமையான கஷ்டத்திற்குப் பிறகு கமாஸி சென்றடைந்தார்கள். அந்த காலத்தில் பல கப்பல்கள் மாறி மாறி சென்று தான் பயணத்தை முழுமை செய்ய முடியும். விமானம் மூலம் அல்ல.

மாறாக, கப்பல் மூலமாக சென்றார்கள். எனவே அன்னார் கராச்சியிலிருந்து அதனிற்காக சென்றார்கள். சாப்பிடுவதற்கு எதுவும் இல்லாத நிலையில் 160 ரூபாய் பயணச் சீட்டு ஒன்றை வாங்கினார்கள். மேலும் அதனிலிருந்து கானா வரை அன்னார் கப்பல் மட்டுமின்றி பஸ், டிராக்டர் மூலமாக நயிஜீரியா வந்தடைந்தார்கள். அங்கிருந்து விமானம் மூலமாக 55 பவுண்டிற்கான பயணச் சீட்டைப் பெறுவதற்காக அன்னார் தனது டிராலி மற்றும் இதர பொருட்ளை விற்று விட்டார்கள். எஞ்சியிருந்த பொருட்களை ஒரு போர்வையில் கட்டினார்கள். பிறகு நயிஜீரியா மிஷனைச் சார்ந்தவர்கள் கானாவிற்கான பயணச் சீட்டை பெற்றுக் கொடுத்தார்கள். 1950 ல் நயிஜீரியாவிலிருந்து விமானம் மூலம் பயணம் செய்தது தமது பொருட்களை விற்றுதான் செய்தார்கள். பிறகு பஸ்ஸில் கானா வரை சென்றார்கள்.

1950 ல் தென் ஆப்ரிக்கா மற்றும் வட ஆப்ரிக்கா மற்றும் ஹாலாந்திற்கு 8 முபலிக்களை அனுப்புவது தொடர்பாக தஹ்ரீகே அஹ்மதிய்யதில் அன்னாரது பெயர் முதலாவது பெயராகும். அங்கு முதல் எண் சவூது அஹ்மது கான் சாஹிப் ஹிஜ்ரி 1329 ஆம் ஆண்டு 25 ம் தேதி கானாவிற்கான அனுப்பப்பட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 14 பக்கம் 286)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களின் கூற்றிற்கேற்ப அன்னார் பாகிஸ்தான் திரும்பி வந்தார்கள். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றில் M.A செய்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அன்னாரது தந்தை 1955 ல் மரணமடைந்தார்கள். அன்னார் கானாவில் இருக்கும்போது அவர்களது தந்தை வஃபாத்தானார்கள். 1961ல் மீண்டும் கானாவில் பணியமர்த்தம் செய்யப்பட்டார்கள். பிறகு அங்கு 1968 வரை மார்க்கத் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் அனுமதியுடன் அன்னார் ஐரோப்பாவிற்கு சுற்றுப் பயணம் செய்தபோது ரப்வாவிலுள்ள மஸ்ஜிது முபாரக்கில் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு தல்கீனே அமல் என்ற பெயரில் ஒரு கூட்டம் நடைபெற்று வந்தது. தினமும் 15 நிமிடங்கள் சொற்பொழிவாற்றப்படும். இந்த நிகழ்ச்சி ஜூலை 7 ஆம் தேதியிலிருந்து ஆரம்பமானது. அந்நிகழ்ச்சி மிகவும் ஆர்வத்துடன்

கேட்கப்பட்டு வந்தது. அறிவுப் பூர்வமான நிகழ்ச்சியாக இருந்தது. அந்த கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய பல மார்க்க அறிஞர்களில் அன்னாரும் ஒருவர் ஆவார்கள்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 24 பக்கம் 392–393)

ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் மொழியாக்கத்திற்கான அமைப்பு நிறுவப்பட்டது. இதன் அடிப்படையில் அன்னாருக்கு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் சொற்பொழிவை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கும் நற்பாக்கியம் கிடைத்தது. ரப்வாவில் நடைபெற்ற கடைசி ஆண்டு மாநாடு வரை அன்னார் இந்த தொண்டு செய்து வந்தார்கள்.

1968 பாகிஸ்தான் வந்த பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரிடம் தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் பாடம் நடத்தும் பொறுப்பை 1969 ல் வழங்கினார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஒரு வருடம் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆங்கில ஆசிரியராக அன்னாரை நியமித்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் அன்னார் பணியமர்த்தப்பட்ட போது அன்னார் தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் பேராசிரியராக தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். 2 மார்ச் 1987 ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பணி செய்யத் துவங்கினார்கள். ஒரு வருடம் வரை இந்த தொண்டை செய்தார்கள்.

பேராசிரியர் சவூது கான் சாஹிபைப் பற்றி அன்னாரது மூத்த சகோதரர் அல் ஃபஸலின் ஆசிரியராக இருந்து சில வருடத்திற்கு முன்பு மரணமடைந்த மஸ்வூது கான் சாஹிப் அவர்கள் கூறி வந்தார்கள்: எங்களது சகோதரர் சவூது அஹ்மது மொலைப் Library ஆவார். அவர் அதிக விஷயங்களைத் தெரிந்திருந்தார். அறிவு படைத்த நபராவார்.

அன்னாரது மகள் ராஷிதா சாஹிபா எழுதுகின்றார்கள்: எனது தந்தை மிகவும் மென்மை குணம் கொண்ட நபர் ஆவார். ஆலிமாவார். இறைவணக்கம் செலுத்தக்கூடியவர். தஹஜ்ஜுத் தொழக்கூடிய நபராவார்கள். மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்ற, கருணை காட்டக்கூடிய, விருந்தோம்பல் செய்யக்கூடிய நபராவார்கள். (இது உண்மையுமாகும். அவர்கள் எழுதியது போன்று தான் அன்னாரும் இருந்தார்கள்.)

அவர்களது மருகமன் முரப்பி நபீஸ் அஹ்மது அதீக் அவர்கள் எழுதுகின்றார்கள்: இறையச்சமுடையவர். இறைவன் மீது அதிக நம்பிக்கை கொண்டவர். ஒரு நல்ல மற்றும் எளிமையான மனிதர். அன்னாரது பற்று மற்றும் மார்க்கத் தொண்டு ஆகியவை வாழ்க்கையை அர்ப்பணித்த அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

முரப்பி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு முறை என்னிடத்தில் அவர்கள் கூறினார்கள்: ஆடை மற்றும் வசதி வாய்ப்புகளை தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும். Fashion மற்றும் உலக இன்பங்கள் போன்றவை வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவரை அழகுபடுத்திக் காட்டுவதில்லை. அன்னாரது வாழ்க்கையில் வெட்கம் என்ற உணர்வு மேலோங்கி காணப்பட்டது.

அன்னாரது மாணவர் இல்யாஸி சாஹிப் எழுதுகின்றார்கள்: சவூது சாஹிப் 1950 முதல் 55 லரை தஃலீமுல் இஸ்லாம் செகன்டரி ஸ்கூல் கமாஸியில் ஆரம்ப கால அஸிஸ்டன்ட் ஹேட் மாஸ்டர் அல்லது Vice Prinicipal ஆக இருந்தார்கள். டாக்டர் S.P அஹ்மது சாஹிப் அதற்கு முன் Head Master ஆக இருந்தார்கள். சவூது சாஹிப் அவர்கள் ஆங்கில மொழிமற்றும் ஆங்கிலத்தின் வரலாற்றை நன்கு அறிந்தவர். அவர் எழுதுகின்றார்: அன்னாருக்கு ஆங்கில மொழி இலக்கணத்தில் இருந்த அறிவு குறிப்பாக சொற்றொடரை அமைப்பது தொடர்பாக அன்னாருக்கு இருந்த அறிவை வேறு எவரிடத்திலும் நான் கண்டதில்லை.

ரப்வாவின் பிரிஸ்பல் முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பேராசிரியர் சவூது கான் சாஹிப் மிகவும் எளிமையான நபராவார். இயக்கத்தின் ஆலிம் ஆவார். அவர்கள் ஜாமிஆவில் படித்தக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது நாங்கள் மாணவர்களாக இருந்தோம். ஜாமிஆவின் கடைசி ஆண்டு வரை முறையாக எல்லா வகுப்புகளுக்கும் குறித்த நேரத்திற்கு வருகை தருவார்கள். கடைசி நிமிடம் வரை பாடம் எடுப்பார்கள். மாணவர்கள் சிறிது நேரம் பேச வேண்டும் என்றும் சிறிது நேரம் படிக்காமல் ஏதாவது பேச வேண்டும் என்றும் முயற்சி செய்வர். ஆனால் அன்னார் கடுமையாக நடந்து கொள்ளாமலும், திட்டாமலும் மிகச் சிறந்த முறையில் அவர்களது கூற்றை மறுத்து விடுவார்கள். மேலும் பாடத்தை தொடர்ந்து நடத்துவார்கள்.

அன்னாரிடம் நான் ஒரு விஷயத்தை பார்த்துள்ளேன். அது என்னவென்றால், அன்னார் வாழ்க்கையை அர்ப்பணித்த மாணவர்கள் மீது மிகவும் கண்ணியம் வைத்திருந்தார்கள். வகுப்பறையில் எவர் மீதாவது கடினமாக நடந்து கொள்ள வேண்டியது வந்தாலும் அவர்களது கண்ணியத்தை கருத்தில் கொள்வார்கள். பிறகு M.T.A வின் பல்வேறு நிகழ்ச்சிகள் ஆரம்ப காலத்தில் Record செய்யப்பட்டபோது அவர்கள் சவூது சாஹிபிடமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளை Record செய்தார்கள். அன்னார் முதுமையை அடைந்திருந்தார்கள்.

ஆனால் அனைத்து நிகழ்ச்சிகளையும் முயற்சி செய்தவாறு சுயமே தயார் செய்வார்கள். எங்களிடத்தில் கேள்விகளை விநியோகிப்பார்கள். அனைத்து பதில்களையும் தாமே தமது கைகளால் எழுதிக் கொடுப்பார்கள். எப்போதும் நிலைமைகள் ஒன்றாக இருப்பதில்லை. சில நேரங்களில் சில வாக்குவாதங்களும் ஏற்பட்டு விடுகின்றன. இது இவ்வாறு இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கக்கூடாது என்று வாக்குவாதம் ஏற்பட்டு விடும். ஆனால் அவர்கள் எத்தகைய பொறுமையாளர் என்றால் அவர்களது முகத்தில் அத்தகைய விஷயங்கள் பேசப்பட்டதற்கான எந்த அறிகுறியும் இருக்காது. எவராவது கடினமாக பேசினாலும் அதை அவர்கள் செவிமடுப்பதில்லை. புன்சிரிப்பு செய்தவாறு நிகழ்ச்சிகளை மீண்டும் துவங்குவார்கள். எங்கு தடைபட்டதோ அங்கிருந்து மீண்டும் Recording ஐ ஆரம்பம் செய்வார்கள்.

அன்னாரது மரணத்திற்குப் பிறகு அவர்களது அண்டை வீட்டில் வசிக்கக் கூடியவர் ஃபஸ்லே இலாஹி மலிக் சாஹிப் கதறி கதறி அழுதவாறு அனைவருக்கும் இத்தகைய அண்டை வீட்டுக் காரர் கிடைப்பதில்லை என்று கூறினார். அன்னார் மிகுந்த எளிமையான நபராவார்கள். மார்க்க அறிவு படைத்தவர். அன்னார் தமக்குப் பின்னால் ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்களை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது ஒரு மகன் சஅது சவூது சாஹிப் யூ.கே வின் ஒரு ஜமாஅத்தில் தலைவராக தொண்டாற்றுகின்றார்கள்.

அல்லாஹ் இவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக. உண்மையில் இவர்களைப் பற்றி எழுதியவை முதலிலும் நான் கூறினேன் அவர்களது சிறப்புப் பண்புகள் இதை விட அதிகமாகும். கிலாஃபத்தோடு அதிகமான அன்பு மற்றும் கட்டுப்படுதலின் தொடர்பை கொண்டிருந்தார்கள். அல்லாஹ் அன்னாரது குழந்தைகளுக்கும் சந்ததிகளுக்கும் கிலாஃபத்தோடும், ஜமாஅத்தோடும் எப்போதும் தொடர்பை வைத்திருக்கச் செய்வானாக. மேலும் அன்னாரது அந்தஸ்தை உயர்த்துவானாக. தொழுகைக்குப் பிறகு நான் இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொற்களும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்த கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்பின் மூலம் தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

**நான் இந்த நகரத்தில் அதாவது காதியானில் இறைவனைப் பார்த்து விட்டேன். நான் இஸ்லாத்தின் அனைத்து முன்னறிவிப்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான தொண்டரின் கைகளில் முழுமையடைவதைக் கண்டேன்**

**மஹ்திக்கான வாதம் செய்த பலர் உலகத்தில் வந்துள்ளனர். அவர்கள் தமது பிரச்சாரத்தை உலகில் பரப்புவதற்காக முன்னறிவிப்புகளை செய்தனர். ஆனால் ஒருவரைத் தவிர வேறெவரது கூற்றும் நிறைவேறவில்லை. மேலும் அந்த நபர் பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது கல்லறையில் " வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் அருளுக்குரிய கல்லறை என்று எழுதப்பட்டுள்ளது"**

**நான் அஹ்மதிகளின் பிரசுரங்களைப் படித்தேன். மேலும் அஹ்மதி முஸ்லிம்களை சந்தித்து அஹ்மதிய்யத்தான் உண்மையான இஸ்லாம் என்றும் அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை விடவும் அதிக உண்மையாளர்களும் உண்மையான முஸ்லிம்களும் ஆவர் என்ற இந்த முடிவை எட்டினேன்**

**மேலும் எத்தனை நூற்றாண்டுகள் கழியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காதியானிலிருந்து உரத்த குரலில் எழுப்பப்படுகின்ற அந்த முழக்கமே உலகத்தில் கேட்கும் என்பதை நான் நன்கறிவேன்**

### காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட புதிய அஹ்மதிகளின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்

**உலகத்தில் ஜமாஅத் பரப்பி வருகின்ற அமைதிக்கான தூதுச் செய்தி போற்றத்தக்கதாகும். நான் ஹுஸூர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் உலகத்தில் அமைதியைப் பரப்புகின்றார்கள். உங்களது ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் முழு உலகத்திலும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்குகின்றார்கள். மேலும் முழு உலகையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்**

**முஸ்லிம் சமுதாயம் எப்போதும் சீக்கிய சமுதாயத்தை ஏற்றுக் கொண்டவர்களோடு அனுதாபத்தோடு நடந்து கொண்டுள்ளது. முஸ்லிம் சமுதாயம் ஒவ்வொரு கஷ்டமான நேரத்திலும் எங்களுக்கு உதவி செய்துள்ளது. இந்த இரண்டு சமுதாயங்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால், இவர்கள் தனித்தவனும், இணையற்றவனுமாகிய இறைவனை வணங்குகின்றனர்**

**உலகத்தில் மனிதத்துவத்தின் முழக்கத்தை முழங்குகின்ற மாநாடுகள் மிகக் குறைவாகவே நடைபெறுகின்றன. மனித இனத்திற்கு தொண்டு செய்வது மிகப்பெரிய வியக்கத்தக்க பணியாகும். அதை ஜமாஅத் செய்து வருகின்றது**

**இன்று எத்தகைய சிறப்பான முறையில் அன்பு மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை ஜமாஅத் தரப்பிலிருந்து வழங்கப்படுகின்றதோ அது போற்றத்தக்கதாகும்**

### காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட சில அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்களின் தாக்கங்கள்

**தகவல்: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் (அறிக்கைத் துறை)**

- 48 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர்
- 18,864 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர்
- ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,345 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்
- தஹஜ்ஜுது தொழுகை
- திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச் சூழல்
- கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள்
- மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு
- கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள்
- நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு
- ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது
- பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது
- 34 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது
- அச்சகம் மற்றும் மின்னணு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ்
- அமைதி நிறைந்த நல்ல சூழ்நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது
- 19 முதல் 21 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான إِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டுடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது
- 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA –வில் ஒளிபரப்பப்பட்டது

*(8-வது இதழின் தொடர்ச்சி...)*

**28 டிசம்பர் 2018**

**முதலாவது நாளின் இரண்டாவது அமர்வு (வெள்ளிக்கிழமை)**

முதலாவது நாளின் இரண்டாவது அமர்வு அமர்வு மதிப்பிற்குரிய மவ்லானா ஷிராஸ் அஹ்மது சாஹிப் (அடிஷ்னல் நாஸிர் அஃலா, தென் இந்தியா) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வங்காளத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஷம்சுத்தீன் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் திலாவத் செய்தார்கள். அவர்கள் சூரா அந்நூரின் 52 முதல் 56 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்.

அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய சஃபீர் அஹ்மது ஷமீம் சாஹிப் (நாயிப் நாஸிம் வக்ஃபே ஜதீது இர்ஷாத்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவிதை வரிகள் பாடப்பட்டன. ரப்வாவின் ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர் மதிப்பிற்குரிய ரிஸ்வான் அஹ்மது சாஹிப் மிகவும் அழகிய குரலில் பாடினார்கள்.

பிறகு இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லவி முனீர் அஹ்மது காதிம் சாஹிப் (அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத், தென் இந்தியா) அவர்கள் நிகழ்த்தினார்கள். சொற்பொழிவின் தலைப்பு ''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு – குடும்ப வாழ்வை மேம்படுத்துவது தொடர்பான சம்பவங்களின் ஒளியில்'' என்பதாகும்.

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையை அறிய வேண்டுமென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையை ஆய்வு செய்யவும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை அன்னாரின் எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் நிழலாகவே காணப்படும்.

கமருல் அன்பியா ஹஸ்ரத் மர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிமுறையாகும்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 492)

ஒருவருடைய குடும்ப வாழ்க்கை தொடர்பாக அன்னாரின் நெருங்கிய உறவினர்தான் சிறந்த முறையில் சாட்சி பகர முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மைத்துனர் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவக்ள் கூறுகின்றார்கள்: ''எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களிடம் ஒருபோதும் வெறுப்பை காட்டியதாக பார்த்துமில்லை; கேட்டதுமில்லை. மாறாக, ஒரு முன்னுதாரண தம்பதிகளில் இருக்க வேண்டிய விஷயங்களையே பார்த்துள்ளேன்''

(சீரத் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் பக்கம் 231)

மாயி இமாம் பீபீ சாஹிபா தன்னுடைய கணவரான ஹஸ்ரத் டேக்கேதார் முஹம்மது அக்பர் சாஹிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டில் வசித்து வந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ''உம்முல் முஃமினீன் அவர்கள் ஒருபோதும் எந்தவொரு விஷயத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கோபப்பட்டதாக நாங்கள் கண்டதில்லை. அவர்கள் எப்போதும் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு மரியாதை செலுத்து வந்தார்கள். மேலும் அன்னாரை மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார்கள்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடன் நடந்து கொண்ட முறை, இக்காலத்தின் நடைமுறை மறறும் சூழ்நிலைக்கு நேர்மாற்றமாக இருந்தது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

''மக்கள் மத்தியில் இயல்பிலேயே எளிமையாக இருக்கின்ற மனிதர்கள், செயற்கையான ஆச்சாரத்தை தேர்ந்தெடுப்பதற்கான ஆற்றல் இல்லை என்பதை நன்கறிந்த வீட்டு வேலை செய்கின்ற பெண்கள் இந்த விஷயத்தை மிகவும் வியப்புடன் பார்க்கின்றார்கள். உலகிலும் தன்னுடைய அக்கம் பக்கத்தில் நடக்கின்ற பொதுவான நடைமுறைக்கு நேர்மாற்றமாக இருப்பதைக் கண்டு மிகவும் வியப்பாக அந்த பெண்கள் 'மிர்ஸா சாஹிப் தன்னுடைய மனைவியின் பேச்சை ரொம்பவே கேட்கின்றார்' என்ற பலமுறை கூறியதை நானே கேட்டுள்ளேன்''

மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக அறிவுரை செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''ஆணாக இருந்து கொண்டு பெண்ணுடன் சண்டை போடுவதை மிகவும் வெட்கங்கெட்ட செயலாக நான் கருதுகின்றேன். இறைவன் நம்மை ஆணாக படைத்துள்ளான் என்றால் இது உண்மையில் நம்மீது அருள்களை முழுமைப்படுத்தவதாகும். பெண்களுடன் மென்மையுடனும் பரிவுடனும் நடந்து கொள்வதே அதற்குரிய நன்றி செலுத்துதல் ஆகும்.''

(ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதிய ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை என்ற நூல், பக்கம் 45)

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மிக்க நல்லமுறையில் கவனித்து வந்தார்கள். ஆனால் அதிகமான விருந்தினர்களின் வருகையின் காரணமாக சில சமயங்களில் அன்னார் விரும்பாத நிலையிலும் கவனிப்பதில் குறை ஏற்பட்டு விடுகிறது. இதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நேசிக்கின்ற சஹாபாக்களும் கூட உணர்ந்திருந்தார்கள். அதாவது ஹுஸூர் (அலை) அவர்களுக்கு நோயினாலும், கடின உழைப்பு மற்றும் வியர்வை வெளியேறுவதாலும் குறிப்பாக உணவின் பக்கம் செலுத்துவது அவசியமாகும்.

அதுபோன்ற ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தவாறு ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

''லாஹூரைச் சார்ந்த முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், உங்களுடைய பணிவும் நுட்பமானது. உங்கள் தலை மீது கடினமான சுமையை சுமக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. நீங்கள் உடலிற்கான சலுகையை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் ஒரு பிரத்தியேக சத்துள்ள உணவு கண்டிப்பாக உங்களுக்காக தினமும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இது சரியான விஷயம்தான். நாமும் அவ்வப்போது இதை கூறியும் உள்ளோம். ஆனால் பெண்கள் தங்கள் பணியிலேயே தீவிரமாக இருப்பதனால் இவ்விஷயங்களில் மிகுதியாக அக்கறை செலுத்துவதில்லை எனக் கூறினார்கள்.

அதற்கு முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் அவர்கள், ஹஸ்ரத்! நீங்கள் அதட்டியும் திட்டியும் கூறுவதில்லை. மேலும் திகிலை ஏற்படுத்துவதில்லை. என்னுடைய நிலை என்னவென்றால், உணவிற்காக நான் தனிப்பட்ட ஏற்பாட்டை மேற்கொள்வேன். என்னுடைய கட்டளையை மீறுவது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறு நடந்தாம் நாம் வேற முறையை கையாள வேண்டியது வரும் என்று கூறினார்கள்.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 07 March 2019 Issue No. 10

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நபர்களுக்கு ஆன்மீக கண் இருப்பதில்லை. அவரிடம் மார்க்கத்தின் மீதான அன்பு இருப்பதில்லை. அன்பு செலுத்தக் கூடியவர் தான் அன்பு செலுத்தக் கூடியவருக்கு எதிராக எதையாவது விரும்புவாரா? எனவேதான் நீ பெறுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றாய் என்றால் நான் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன் என்று அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். எனவே இந்த துஆவை செய்வது அந்த நேர்வழியை பெறுவதற்கான ஆயத்தமே ஆகும்.

இந்த துஆவிற்குப் பிறகு சூரா பக்கராவின் ஆரம்பத்திலேயே هُدًى لِّلْمُتَّقِيْنَ என்று கூறி இருப்பதன் மூலம் இறைவன் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறான் என்பது தெரிகிறது. அதாவது இந்த வேதம் இறையச்சமுடையவர்களை உயர்ந்த தகுதிக்கு கொண்டு செல்வதற்கான வாக்குறுதியை வழங்குகின்றது. இதன் அடிப்படையில் இதன் பொருள் என்னவென்றால், இந்த வேதம் விலகி இருப்பதற்கும், அறிவுரைகளை செவியேற்பதற்கும் ஆயத்தமாக இருக்கின்ற மக்களுக்கு பயனளிக்கக் கூடியதாகும். எவ்வித தயக்கமுமின்றி உண்மையை செவியேற்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றவர்களே இந்த அந்தஸ்தை பெற்றிருக்கின்ற இறையச்சமுடையவர்கள் ஆவர். ஒருவர் முஸ்லிமாகும்போது அவர் இறையச்சமுடையவராகின்றார்.

மேலும் கூறுகின்றான்: இந்த வேதம் இறையச்சமுடையவர்களுக்கு வழிகாட்டக்கூடியதாக இருக்கிறது. அதாவது هُدًى لِّلْمُتَّقِيْنَ என்பது இஃப்திஆல் என்ற மூலச் சொல்லிலிருந்து வந்துள்ளது.

மேலும் இது துன்பத்திற்காக வருகின்றது. அதாவது இதில் நாம் எந்த அளவிற்கு இறையச்சத்தை விரும்புகின்றோமோ அது துன்பத்தை மேற்கொள்ளாமல் கிடைக்காது. இதனை பாதுகாப்பதற்காக இந்த வேதத்தில் வழிகாட்டல் இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே இறையச்சமுடையவருக்கு நன்மை செய்வதில் துன்பத்தை மேற்கொள்ள வேண்டியது வருகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 12–14)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

**1800 425 40000**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

## திருக்குர்ஆனிலிருந்து....

அவன் (அல்லாஹ) காலைப்பொழுதை விடியச் செய்பவன். அவன் இரவை ஓய்விற்காகவும், சூரியனையும், சந்திரனையும் (காலத்தை) கணக்கிடுவதற்காகவும் ஆக்கியுள்ளான். இது மிகைத்தவனும், நன்கு அறிபவனுமான அவனுடைய நியதியாகும். (6:97)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## வருங்காலத்தில் மார்க்க அறிவையும் உலக அறிவையும் கற்றுக் கொடுக்கக் கூடியர்களாக வக்ஃபே நவ் இருக்க வேண்டும்

சில வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கு சில துறைகளில் தனிப்பட்ட ஆர்வம் இருக்கின்றது. அவர்கள் என்னிடம் கேட்கும்போது அவர்களின் ஆர்வத்தைக் கண்டு நான் அவர்கள் விரும்பிய பாடத்தைப் படிக்க அனுமதி அளிக்கின்றேன்.

ஆனால், மாணவர்களுக்கு ஒன்றை கூறுவேன். அவர்கள் அறிவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சியிலும் செல்ல வேண்டும். பொதுவாக வக்ஃபே நவ் பிள்ளைகளும் மற்ற மாணவர்களும் இந்த துறைகளுக்கு செல்ல வேண்டும்.

அறிவியலின் பல்வேறு துறைகளில் நமது சிறந்த அறிவியல் அறிஞர்கள் தோன்றி விட்டால் எங்கு எதிர்காலத்தில் மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் அஹ்மதிகளாக இருப்பார்களோ அங்கு உலக அறிவை தருபவர்களும் அஹ்மதி முஸ்லிம்களாகவே இருப்பர்.

உலகம் உங்களின் தேவையை நாடி நிற்கும். அதுபோன்ற நிலையில் வக்ஃபே நவ் நிச்சயமாக உலகப் பணிகளை ஆற்றக் கூடியவர்களாக இருப்பர். ஆனால், அவர்களின் நோக்கம் தமது பணியின் மூலமாக அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகிற்கு நிரூபணம் செய்வதாக அமையும். அவர்கள் மார்க்கத்தை உலகில் பரப்புபவர்களாக இருப்பர். மற்ற துறைகளிலும் வக்ஃபே நவ் பிள்ளைகள் செல்ல இயலும்.

ஆனால், அடிப்படை நோக்கம் இவ்வாறானதாக இருக்க வேண்டும். அதனை அனைவரும் அறிந்திருக்க வேண்டும். அது என்னவென்றால் நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் ஆவேன். உலகப் பணிகளை விட்டு விட்டு மார்க்கப் பணிகளை ஆற்றும்படி என்னிடம் எப்போது கூறப்பட்டாலும் நான் எந்தக் காரண காரியங்களையும் கற்பிக்காமல் சென்று விடுவேன் என்ற எண்ணம் இருக்க வேண்டும். (குத்பா ஜுமுஆ 28.10.2016)

## நபிமார்களுக்கெல்லாம் தலைவர் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் நேர்மையுடன் பார்க்கும் போது நுபுவ்வத் தொடர்ச்சியில் (இறைத்தூதர் தொடரில்) மிக உயர் தகுதியுடைய, கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்புக்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கிறோம். அவர் நபிமார்களின் தலைவரும் தீர்க்கதரிசிகளில் மிகப் பெருமைக்குரியவரும், அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமுமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களேயாவர். அவரது நிழலின் கீழ் பத்து நாட்கள் நடந்தால் இதற்கு முன் ஆயிரம் வருடங்கள் வரை கிடைக்க முடியாத அந்தப் பிரகாசம் கிடைத்து விடுகின்றது.

(ரூஹானி கஸாயின் தொகுதி 12 சிராஜுல் முனீர் பக்கம் 82)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad